11th March 1964]

(*b*) when a final decision would be taken in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) The matter is under correspondence with the Government of Mysore and a decision will be taken after their reply is reecived.

திரு. மா. இராசாங்கம் : மைசூர் மாநில சர்க்காரோடு நமது மாநில சர்க்கார் போக்குவரத்துத் துறை பேச்சுவார்த்தை நடத்துவதைப் போல், கேரள மாநில சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தினர்களே, அது எந்த நிலையில் உள்ளது ? அந்தப் பேச்சுவார்த்தை முடிந்தால் சர்க்கார் பஸ்கள் பெரியகுளம் தாலுக்கா வழியாக மதுரைக்கு வர வழி செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முடிவு ஒன்றும் ஏற்பட வில்லை. பேச்சுவார்த்தை நடத்தின மைசூரிலும் சரி, பேச்சு வார்த்தை நடத்தாத கேரளாவிலும் சரி, முடிவு ஏற்படவில்லை.

* 215 *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the new Inter-State bus routes to be run by the Madras State Transport to the Kerala State; and

(*b*) the present stage of negotiations with the Kerala Government?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) The matter is under correspondence with the Government of Kerala; and a decision will be taken after their reply is received and considered.

* 216 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to open a new bus route by the State Transport Department from Madurai to Kottayam (via) Kambam, Kumuli, etc.; and

(*b*) if so, the present stage of the proposal?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) The matter is under correspondence with the State Transport Board, Trivandrum.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, மைசூர் அரசாங்கத் தோடு பேச்சு வார்த்தை நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. மைசூர் லிமிட் 20 மைல்தான் இருக்கிறது. அதற்கு பர்மிட் கொடுப்பது நமக்கு லாபமாக இல்லை. ஏறக்குறைய பணம் பூராவாக மைசூர் அரசாங்கத்திற்குப் போகிறது. ஆகவே, நம் முடைய லிமிட் வரையில் அரசாங்க பஸ் விடக்கூடிய நடவடிக்கை யில் அரசாங்கம் ஈடுபடுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் கொள்கை அவ்வளவு சரி என்று நான் ஒத்துக்கொள்ளவில்லை. இப்பொழுது பெங்களூருக்குப் பஸ் விட்டால் நிறைய பிரயாணிகள் போவார்கள்.